ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

பலகற்றும் பரோபதேசத்திற்காகவே பண்டிதர்களும் அதைப் பிரயோகம் செய்கிறார்கள் என்றால் பாமரர்களைப்பற்றிக் கேழ்க்கவா வேண்டும். கோபங்கூடாதெனப் பிறருக்குச் சொல்லிவிட்டுக் கடுஞ்சினங் கொள்ளுவார்கள். பித்ரு பக்தி வேணாமெனப்புகட்டிப் பிதாவினிடத்தில் பிராது செய்வார்கள். ஊருக்காக உழைக்கிறேனென்று தன் சொந்த விஷயத்தில் மோசம்போவார்கள். பெரியோர்களோவெனில் எவ்வளவு கற்றாலென்ன; ஸ்வானுஷ்டானத்திற்கு உபயோகப்படுவதில்லையே எனக் கவலைப்படுவார்கள். எவ்விதத்திலும் அனுஷ்டானத்தில் கொண்டுவரப் பார்ப்பார்கள். பாடுபட்டுத் தேடின பணத்தை தாசிக்கும் வேசிக்கும் என்று தாறுமாறாகத் தெருவிலிரைக்காமல் தர்ம காரியத்திலேயே உபயோகப்படுத்துவார்கள். தற்காலத்திலோவெனில் பால்யத்திலேயே பிள்ளைகளை பிராசீனப்படிப்பில் போடவேண்டுமென்று பிறருக்குச்சொல்லிவிட்டுத்தன் குழந்தைகளையும்புதுப்படிப்பிற்கு அனுப்புகிறார்கள். வர்ணாசிரமாசாரம் சரிவர நடக்கவில்லையே பிராசீன வழக்கப்படி அதைநடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஏதோஒரு நாளைக்கு ஸபைகூடி பேசிவிட்டுப் புதுநாகரீகப்படியே நடத்திவருகிறார்கள். சின்னாட்களுக்கு முன்னாவது பிர்மசாரிப் பையன்கள் உபாகர்மங்களுக்கு முந்தியும் பிந்தியும் சிலவேளைகளிலாவதுஸமிதாதானம் செய்துவந்தார்கள் தற்போதோவெனில் இட்டலியும் மொட்டயப்பமும் தின்பதே உபாகர்மாவில் முக்கியமெனக் கொண்டாடுகிறார்கள். காயத்திரீ ஜபத்தில் முதல் நாள் எள்ளைத் தின்று உபவாஸமிருந்து மகாநதி தீர்த்தத்தில் ஸ்னானம் செய்து ஸங்கவகாலத்தில் ஸஹஸ்ராவிருத்தி காயத்திரீஜபம் செய்யவேண்டுமென்று விதிப்படி உபவாஸம் முதலிய பூர்வாங்கங்களைச் சரிவர செய்பவர்களைக் காண்பதறிதாயிருக்கிறது. அப்படி இருக்கையில் தன் சிரேயஸ்ஸுக்காக சிரமமப்படுகிறவர்களை எங்கே காணமுடியும். ஸ்வானுஷ்டானமில்லாமல் பரோபதேசத்தில்மாத்திரம் பாண்டித்யத்தை அடைந்தவர்கள் பேச்சை எவர் கேழ்ப்பார். தர்மவார்த்தைகளைப் பேசிக்கொண்டிருப்பவர்களே தர்மானுஷ்டானத்தில் ஈடுபடாமல்போவார்களானால்தர்மத்தைத்துவேஷிப்பவர்களா அனுஷ்டிக்கப்போகிறார்கள்? தற்காலத்தில் தர்மம்ஆசிரயமின்றி தபிக்கிறதேயென்றுஎங்கோஒருமூலையில்சில தார்மிகர்கள் தாபப்படுகிறார்கள் பரமேசுவரன்தான் தர்மத்திற்கு அவலம்பத்தை உண்டுபண்ணி எல்லோருக்கும் தர்ம புத்தியைக்கொடுத்து அருள்புரியவேண்டும்.

சுபம் !

பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

ப்ரஜாபதி-ஸூ ஆவணிமீ ௧௮௨

# மோக்ஷமார்க்கத்திற்கிடையூறு.

"நல்ல காரியத்திற்குப்பல இடையூறுகள் நேரும்" என்ற முந்தியமொழிப்படி மோக்ஷ ஸாதனங்களில் பிரவிருத்தித்தவர்களுக்கு பற்பல இடையூறுகள் வலுவுலேயே வேண்டாமென்றாலும் வந்து நிற்கும். முதலாவது வைராக்யம் திடப்படாது. அப்பொழுது ஆசையால் துளைக்கப்பட்ட மனதில் ராகத்துவேஷாதிகள் புகுந்து, அதை உள்நோக்கும்படிவிடாமல் வெளிப்பட்ட விஷயங்களிலிழுத்துவிட்டு, ஸம்ஸாரக்கடலினின்றுகரையேற வழியில்லாமல் ஆங்கே உழலும்படிசெய்து விடுகின்றன. அதனால் ராகத்துவேஷவசமானவர்கள் முதல்படியான காம்யகர்மங்களையே அனுஷ்டிக்க நினைப்பதில்லை. அம்மட்டோடில்லாமல் அசாஸ்திரீயமான பல வழிகளிலும் பிரவிருத்தித்து விடுகிறார்கள். இது முதலாவது இடையூறு. ஒருவாறு காம்யகர்மங்களில் பிரவேசித்து அதன்பலனை அனுபவிப்பதற்குறிய சுத்தியை அடைந்தாலும் காமத்தால் கீழும்மேலுமான உலகங்களில்இழுக்கப்பட்டு காத்தாடிபோல் சுழண்டு வருகையில் மோக்ஷ ஸாதனங்களில் எங்கே நிலைக்கப்போகிறான். ஏதோ ஒரு புண்ணிய விசேஷத்தால் இந்தக்கஷ்டம் மனதில்தோன்றி காம்யகர்மங்களைவிட்டு நிஷ்காம கர்மயோகத்தில் பிரவிருத்தித்து ஆபாத வைராக்யத்தையோ அல்லது அபரவைராக்யத்தையோ அடைந்தாலும்போதாது பிராசீன வாஸனாபலத்தாலிழுக்கப்பட்டு திடமான அப்பியாஸத்திற்கிடங்கொடுக்காது. திடமான அப்பியாஸத்தையும் பரவைராக்கியத்தையும் அடையாவிடில் அந்தக்கரண விருத்திகள் அடங்கமாட்டா. திடமான அப்பியாஸமும் பரவைராக்யமும் ஏற்பட்டு விருத்திகளுமொடுங்கி வாஸனையற்ற நிலையையடைந்தால்—மேரு-ஸ்வர்க்கம் முதலிய லோகாந்தரங்களில் ஒவ்வொரு ஸ்தானத்தில்

ஆதிகாரிய பதவியையடைந்திருக்கும் தேவர்கள் பரீக்ஷார்த்தமாக வந்துவிடுவார்கள்' வந்து — ஓ! மகானுபாவ!! என்று அன்பா யழைத்து—"தங்கள் பாக்கியமே பாக்கியம். தங்களுடைய ஸமாதி பலத்தால் எல்லோரும் தங்களுக்கு வசமாகி விட்டார்கள். எல்லா லோகங்களும் தங்களுக்கு சுலபமாய் கிடைக்கும். வேண் டிய விஷயங்களிருக்கின்றன. இஷ்டப்படி அனுபவிக்கலாம். தங்களுடைய பாத சுச்ரூஷை முதலிய பணிவிடைசெய்யப் பல திவ்ய ஸ்திரீகள் காத்திருக்கிறார்கள். இதோ வந்திருக்கிறது விமானம். ஏறவேண்டும். இப்பொழுதே வரவேண்டும்." என் பதாதி இனியமொழிகளைச்சொல்லி பலவிதமாக வேண்டிக்கொள் வார்கள். இந்த ஸமயத்தில் என்ன விவேகியானாலும் வைராக்ய முள்ளவனானாலும் புத்திமேற்படாமலிருக்காது. தேவர்களே நம் மை நாடிவந்தார்களே. நம்முடைய தபஸ்ஸல்லவா தபஸ்ஸு என்று கர்வமுண்டாகாமலிருக்காது, பார லௌகிக விபூதிகளில் பற்றுதலேற்படாமல் போகாது. அந்த கர்வமும் பற்றுதலுமே பெரிய இடையூறுகள். இவைகளைப் பரிஹரிப்பது அஸாத்யம். இந்த நிலைமையிற்றான் யோகி மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண் டும். இதில் மயங்கிவிட்டால் மீண்டும் மீளாப்பவப் பிணிக்கே ஆளாகவேண்டும். எவ்வளவோ சிரமப்பட்டு இந்த நிலைமைவரை வந்துவிட்டுக் கீழிறங்கிவிடுவது கஷ்டத்திலும் கஷ்ட மாய்விடும் என்று ஸ்திரபுத்தியால் நிதானித்து மதிமயக்கத்தை அடையக்கூடாதுகர்வத்தையுமடையக்கூடாது. அற்பமானவிஷய ஸுகங்களில் ஆசைகொள்ளக்கூடாது. ஆசைப்பட்டால்அனுதிஸம் ஸாரமென்னும் ஆழக்குழியில் விழுந்து கரையேற வழியில்லாமல் கஷ்டப்படவேண்டியதாய்விடும். கீழேயுள்ளவன் தவறிவிழுந்து விட்டால் அதிகக் கெடுதிவந்துவிடாது மேலேறியவன் தவறி விழுந்துவிடுவது பெரியகெடுதியாய்விடும் வியாதி முதலியவைகள் யோக விக்கினங்களென யோகஸூத்திரத்தில் குறிக்கப்பட்டவை களையும் விலக்கிக்கொண்டு எவ்வித இடையூறுகளுக்கும் இடங் கொடாமல் ஜாக்கிரதையாயிருந்து ஞானாப்யாஸ பலத்தால் ஸம்ஸாரபந்தத்தை விட்டொழித்து நித்ய நிரதிசயசிதானந்தமய ஸ்வரூபமான மோக்ஷஸுகத்தைப்பெறுவதே ஜன்மஸாபல்யமாம். பாரதநாட்டில் பரமபாவனமான பிராமண ஜன்மத்தையெடுத்து மோசம்போகக்கூடாது. பிறவியை பாழாக அடிக்கக்கூடாது

என்பதாதி நல்ல உபதேசங்களை எல்லா உபநிடதங்களும் செய்கின்றன. ஆயிரம் அன்னையை விட அதிகமாக நமக்கு ஹிதத்தை போதிப்பது. இவைகளைவிட்டால் வேறொன்றுமில்லை. ஆகையால் அவைகள் போதித்தவண்ணம் எல்லோரும் அவரவர்களுடைய அதிகாரத்திற்கு ஏற்றவாறு பிரவிருத்தித்து ஸ்ரேயஸ்ஸை அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

## காயத்ரீஜப விஷயம்.

காயத்ரீ ஜபவிஷயமாக நமது ஆர்யதர்மம் மூலமாக அடிக்கடி அனேக வித்வான்களால் எழுதப்பட்டு வந்திருந்தும் அதன் மூலத்தை எழுதவேணுமென்ற எண்ணத்துடன் எனக்கு ஏற்பட்ட அபிப்பிராயத்தை இதில் எழுதலானேன்.

வைத்யனாத தீக்ஷிதீய வர்ணாசிரம காண்டம் ஒன்று தவிர நிர்ணயஸிந்து தர்மஸிந்து ஸ்மிருதி கௌஸ்துபம் புருஷார்த்த சிந்தாமணி முதலிய தர்மசாஸ்திரக் கிரந்தங்களில் உபாகர்ம விஷயமாக அபரிமிதமாக சொல்லப்பட்டும் காயத்ரீ ஜபத்தைப்பற்றி ஒரு வாக்கியங்கூட சொல்லப்படவில்லை. தவிரவும் போதயனர் ஆசுவலாயனர் முதலானவர்களின் கிருஹ்யம் தர்மம் முதலியவைகளிலும் சொல்லப்படவில்லை. ஆபஸ்தம்ப க்ருஹ்பத்தில் **उपाकरणे समापने च** என்ற ஸூத்திரத்திற்கு ஸுதர்சனாசார்ய பாஷியத்தில் உபாகர்மாவையும் உத்ஸர்ஜனத்தையும்தான் சொன்னாரே தவிர காயத்ரீஜபத்தைப்பற்றி அங்கு ஒன்றும் சொல்லவில்லை. ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரம் பிரச்னம்-1. படலம்-3. கண்டம் 9 ல்

श्रावण्यां पौर्णमास्यामध्यायमुपाकृत्य मासं प्रदोषे नाधीयीत तैष्यां पौर्णमास्यां रोहिण्यां वा विरमेत् ॥

என்று உபாகர்மாவுக்கும் உத்ஸர் ஜனத்திர்க்கும் காலநிர்ணயம் சொன்னதைத்தவிர்த்து காயத்ரீஜப விஷயமாக அவ்விடத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை ஆகையால் உபாகர்மாவுக்கும்

காயத்ரீஜபத்திற்கும் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லையென்று ஏற்பட்டுவிட்டது. ஆபஸ்தம்ப தர்மஸூத்ரம் ப்ரச்நம்-1-படலம் 9 கண்டம்-24-ல்

क्षत्रियं हत्वा गवां सहस्रं वैरयातनार्थं दद्यात् ।

என்று ஆரம்பித்து-9-10-படலங்களில் ப்ராயச்சித்தம் சொல்லிக்கொண்டுவருகிற மத்யத்தில் படலம்-9-கண்டம்-26 ஸூ-10-ல் मिथ्याधीतप्रायश्चित्तम् என்று ஆரம்பித்து கண்டம்-27-ஸூ-2-வரையில் இது ஸம்பந்தமான ப்ராயச்சித்தத்தை சொல்லிவருகையில்-6-ப்ரகாரமாக இந்த ப்ராயச்சித்தத்தை சொல்லுகையில் 5-வதாக

श्रावण्यां पौर्णमास्यां तिलभक्षमपोष्य श्वोवाभूते महानदमुदकमुपस्पृश्य सावित्र्या समित्सहस्रमादध्याज्जपेद्वा ।

என்ற ஸூத்ரந்தான் காயத்ரீஜபத்திற்கு மூலப்ரமாணமாக ஏற்படுகிறது. ஷை ஸூத்ரம்

श्रावण्यां पौर्णमास्यां तिलभक्षमपोष्य श्वोभूते ।

என்று சொல்லப்பட்டதால் பௌர்ணமியில் உபவாஸம் செய்து மறுநாள் காயத்ரீஜபம் செய்யவேண்டும் என்றுதான் ஏற்படுகிறதேதவிர மறுநாள் ப்ரதிபத்தைப்பற்றி இவ்வளவு முகூர்த்தம் இருக்கவேணுமென்று சொல்லப்படவில்லை அஷ்டகாப்ரகரணத்தில் அஷ்டமிதிதியில் ஏகாஷ்டகா சிராத்தம்செய்து மறுநாள் நவமியில் அன்வஷ்டகா சிராத்தம் செய்யும்படி ஏற்படுகிறது. சில ஸமயங்களில் அஷ்டமியும் நவமியும் திதித்வயமாக வருங்காலம் ஒரேதினத்தில் அஷ்டகான்வஷ்டகா இரண்டையும் செய்யும்படி ஏற்படுமா அவ்விதம் செய்யக்கூடாது. அவ்விடத்தில் ஸூத்ரத்தில் ஏகாஷ்டகையை விதித்து श्वोभूतेऽन्वष्टका என்று சொல்லியதால் ஏகாஷ்டகைக்குமறுநாள் தசமிதிதியாக இருந்தாலும் அதிதியாக இருந்தாலும் அன்வஷ்டகா சிராத்தம் செய்யவேண்டியதுதான். அதைப்போல் பௌர்ணமியில் உபவாஸமிருந்து மறுநாள் காயத்ரீஜபம் செய்யவேணும். பௌர்ணமாஸையில் உபவாஸம் இரண்டுவிதம். நித்யமான பர்வோபவாஸத்திற்கும் நைமித்தகமான(ப்ராயச்சித்தரூபமான)பர்வோபவாசத்திற்கும்பேதம்ஏற்படு

கிறது. தர்சபூர்ண மாஸஸம்பந்தமான உபவாஸம் நித்யம், பிரதிருத உபவாஸம் பிராயச்சித்த ஸம்பந்தமானதால் நைமித்திகம். பௌர்ணிமா நிர்ணயப் பிரகரணத்தில்

भूतविद्धा न कर्तव्या अमावास्या च पूर्णिमा ।

என்றதில் சதுர்தசி ஸம்பந்தமான பர்வோபவாஸம் நிஷேதமானதால் உதயாதி த்ரிமுகூர்த்த வியாபிஸம்பந்த பிரதிபன் மிசிர பர்வாவில் உபவாஸமிருந்து மறுநாள் பிராயச் சித்தானுஷ்டான காலமான ஸங்கவகாலத்தில் காயத்ரீஜபானுஷ்டானம் செய்யவேணும் என்றுதான் ஏர்ப்படுகிறது. வர்ணாசிரமத்தில் இது விஷயமாக சொல்லப்பட்ட सन्धिस्सङ्गवतःपश्चात् என்ற இரண்டு வசனங்களுக்கும் ருஷி வசனகர்த்தாவைக் குறிப்பிடாமல் பொதுவாக स्मृत्यन्तरे என்றுமாத்திரம் எழுதப்பட்டிருப்பதாலும் வேறு ஒரு ஸ்மிருதியிலும் இவ்விஷயத்தைப்பற்றி சொல்லாததாலும் ருஷி வசனங்கள் ஸாமான்யமென்றுதான் ஏற்படுகிறது. ஆனால் ஆபஸ்தம்ப தர்மஸூத்திர வாக்கியமில்லாவிடில் இந்தவசனங்களுக்கு அதிகப்பிரமாணம் ஏற்படும்.

ஆகையால் பிரஜாபதிஸூத்திய मिथ्याधीतप्रायश्चित्तरूपमान गायत्री ஜபத்தை நாளது ஆவணிமீ 12௳ வெள்ளிக்கிழமைதினம் உபவாஸமிருந்து 13௳ சனிக்கிழமைதினம் காயத்ரீஜபத்தை அனுஷ்டித்து பரிசுத்தாளாக ஆகவேணுமென்று பிரார்த்திப்பதுடன் நாளது-மீ 11௳ வியாழனில் உபாகர்மானுஷ்டானம் செய்பவர்களும் அடியில் கண்டபடியே காயத்ரீஜபத்தையும் அனுஷ்டிப்பது தான் சாஸ்திர ஸம்மதமாகுமென்பது இந்தஸஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது.

முத்து தீக்ஷிதர்

## ॥ माध्वाथशब्दार्थः ॥

த்வைத அத்வைத விசிஷ்டாத்வைதிகள் தங்கள் தங்கள் மதக்ரந்தங்களிலே விசாரம் செய்து தங்களைச் சேர்ந்தவர்களை சீர் திருத்திக்கொண்டு வரவேண்டுமென்றும் பிறமதஸ்தர்களை திருத்துவதும் க்ரந்தங்களையாவது ஆசாரஸம்ப்ரதாயங்களையாவது தூஷிப்பதும் கூடாதென்கிற அபிப்பிராயத்தைமுன்னிட்டுஸுமார் 4, 5 மாதகாலமாய் நான் ஆரிய தர்மத்தில் எழுதிவந்த விஷயங்களில் மேல் மேல் எழுதும்படியாக நேர்ந்ததை ஆரியதர்மத்தின்

மூலம் எல்லோரும் அறிந்தவிஷயம். அப்படிக்கிருக்க கும்ப கோணம் ஸ்ரீமான் ரு.நாகருஜசர்மா அவர்கள் தங்கள் மத்வ மதாபினிவேசத்தால் என்வாக்கியங்களை கண்டித்துவிட்டதாக தானே எண்ணிக்கொண்டு தனியாக தபால் மூலமாக எனக்கு அனுப்பிய ச்லோகங்களுக்குப் பதில் நான் எழுதியனுப்புவதை பூருவையும்வெளியிடாமல் ஏதோ ஒரு அம்சம் ச்லோகங்களைமாத் திரம்எழுதிஅதற்கு கண்டனம்செய்ததுபோல்மறுபடிஷியாரால் அனுப்பப்பட்டச்லோகங்களுக்குபதிலும் நான்27ச்லோகங்களால் பதிலனுப்பியதையும் எல்லோருக்கும் தெரிவிக்கவேணுமென்பதை முன்னிட்டு இதில் ஸ்வல்பம் எழுதியிருக்கிறேன்.

அதாவது மத்வபாஷ்யத்தில் ஆரம்பத்தில் முதல் பதமான अथ என்கிறதற்கு அர்த்தம் எழுதும் காலத்தில் अथ शब्दो मङ्गलार्थः अधिकारानन्तर्यार्थश्च என்று எழுதி ஷி மூன்று அர்த்தங்களுக்கும் பிரமாணங்கள்காட்டியிருப்பதினால் மூன்று அர்த்தமும் ஸமானமாகவேஒரே இடத்தில் ஒப்புக்கொண்டதாக ஷி மத்வ பாஷ்யத்துக்கு அபிப்பிராயம் எல்லாரும் அறிந்த விஷயமே. இரண்டு மதஸ்தர்கள் आनन्तर्य என்கிற ஒரு அர்த்தம்தான் ப்ரகிருதத்தில் சொல்லக்கூடும் என்று வியாக்யானம் செய்திருப்பதும் எல்லோரும் அறிந்ததே. இப்படிக்கிருக்க மங்களார்த்தத்தை முக்யார்த்தத்துடன்ஸமமாகவும் प्रथमार्थமாகவும்எழுதினது அனுசிதமென்று ஸயுக்திகமாகவும்சாஸ்திரத்துடனும்ஸ்வல்பம்எழுதி நான் காண்பிவித்ததை ஷி நாகருஜசர்மா அவர்கள் மறுத்துச்சொல்லிவிட்டதுபோல் வெறும் ச்லோகங்களை எழுதி நான் எழுதிய யுக்திக்கும் சாஸ்திரத்துக்கும் प्रतिबन्दिக்கும் ஸமாதானம் சொலலாமல் கேவலம் ஆக்ரஹத்தில் पाणिनि पतञ्जलि जैमिनि முதலானவர்களுடைய சாஸ்திரத்தை பாலவஞ்சகர்கள்போல் தூஷித்து எழுதியிருக்கிறார். மாத்வபாஷ்ய டீகாகாரர்களும் स्थितस्यगतिश्चिन्तनीया என்கிற நியாயத்தை அனுஸரித்து பாஷ்யத்தில் சொல்லியிருப்பது விருத்தமானதால் பல்பஜமாக எழுதின மங்களார்த்தஸமர்த்தத்தை நான் ஆக்ஷேபித்தபடி ஆக்ஷேபித்துக்கொண்டுஸமாதானம் செய்யாதபடியால் நன்றாய் ஷி விஷயம் உபபாதித்தார்களில்லை. இன்று நான் எழுதியிருப்பதையும் ஷியார் அறியாமல் கோபத்தில் அவதூறாக லட்டர் எழுதிவிட்டார்.

**अन्यकथाप्रसङ्गेन इदमायातम्** அதாவது ஸகலவேத பாஷ்ய மதங்களையும் நிரஸித்து பூர்ண வைதிக விசாரமான அத்வைதமதத்தை அவைதிகமென்ற துச்சவார்த்தையை ஷடித்வைதமதஸ்தர்கள்கிளப்பினதை முன்னிட்டு நேர்ந்த வ்யாஸத்தை விஸ்தரிக்காமல் மஹான்களுடைய அபசாரத்துக்கு பயந்து நிறுத்திக்கொள்ளவேணுமென்று நான் எழுதினதையும் அவர் கவனியாமல் அவருடைய ஞானப்ரகாசத்துக்காக மேல்மேல் எழுதினால் நானும் மேல்மேல் மத்வபாஷ்ய தூஷணம் எழுதும்படி நேரிடுமென்றும் எழுதியிருக்கிறேன்.

அத்வைதியாக நீர் பேசுகிறீர் என்று என்னை அவர் தூஷித்ததற்கும் **वयं पञ्चोत्तरं शतम्** । என்கிற பாரத கதையைச் சொல்லி நாங்களும் அத்வைதிகளும் சேர்ந்துகொள்ள நியாயமிருக்கிறதென்பதையும் எழுதியிருக்கிறேன். நான்எழுதியிருப்பதை (ஆதிமுதல் நாளதுவரை) பூராவையும் அச்சிட்டு மூன்று மதஸ்தர்களில் லௌகிகர்களான வித்வான்களுக்கும் கேவல வித்வான்களுக்கும் அனுப்பி அபிப்பிராயத்தைத்தெரிந்து எழுதும்படிக்கும் எழுதியிருக்கிறேன். அவர் சாஸ்த்திரத்திற்குக் கட்டுப்படாமல் தோன்றினதை நிந்தனையாக மாத்திரம் எழுதுவதால் இனி அவருக்கு பதில்எழுதுவதை நிறுத்திக்கொண்டு ஷடிவிஷயத்தை பண்டிதர்கள் அபிப்பிராயத்திற்கு விட்டுவிட்டேன்.

நான் எழுதியதின் சுருக்கம்

इत्थं सूत्रगताथशब्द विवृतिः श्रीमध्वभाष्योदिता
युक्ता न प्रतिपादिता विवृतिभिः न्यायानपेतेति च ।
चार्थान्वाचय लेखनन्तु विमतं लोकोक्तिदूष्यं स्फुटम्
तुल्यार्थस्तु समुच्चयोत्र न भवेत् हर्यादिके दोषतः ॥
भेदपञ्चकवत्सर्वा व्याख्यस्वीयैक गोचरा ।
न तु शास्त्रान्तरस्थानां रीतीराश्रित्यवर्णिता ॥
अन्नपञ्चक दृष्टान्त न्यायोभेदे प्रदर्शितः ।
तन्नयुक्तं बहुविधं भक्तं सूदैः प्रकल्प्यते ॥

ஸ்ரீமான் ருமருவ் அவர்கள் ஆரியதர்மத்தில் எழுதியதற்கு பதில் எழுதவேண்டியதாக ஒன்றுமில்லை **मङ्गल व्यभिचारिनवा** என்கிற விசாரம் **अप्रकृतं** இதன் ஆரம்பம் 25—6—31 தேதியிலுள்ள ஆரியதர்ம" ஸஞ்சிகையில் காணலாம். காளி V. ரங்காச்சாரியார்.

இவ்வருஷத்தில் உபாகர்மத்திலும் காயத்திரீ ஜபத்திலும் பல சமயங்களேற்பட்டு அதற்குப் பரிகாரத்தைப் பலபேர் பத்திரிகைகளில் பலவிதமாகப் பிரசுரித்தார்கள். அவைகளுள் எவர் சொன்னதுசரி எவர் சொன்னது சரியல்ல என்று அனுஷ்டானம் ஒருவிதமாய் இல்லாததால் தீர்மானிக்க முடியவில்லை. அவரவர் சொன்னதையே அவரவர் ஸாதிக்க முயலுவார்களேயன்றி பக்ஷபாதமில்லாமல் ஸித்தாந்தப்படுத்த ஒற்றுமைப்படமாட்டார்கள் என்று தோன்றினலும் அப்படியேநினைத்து மௌனமாயிருந்து விடுவதுநியாயமல்ல. எப்படியாவது ஒரு ஸித்தாந்தத்திற்கு வரும்படிவிசாரம்செய்யவேண்டியது அவசியம். இந்தவருஷத்திற்கு அது உபயோகப்படாவிட்டாலும் பிந்திய காரியத்திலாவது உபயோகப்படும். அதனல் அவைகளிலேற்பட்ட கக்ஷிகளை முதலில் வெளியிடுகிறோம். அதிலும் காயத்திரீ ஜபவிஷயத்திலும் அதிக விசாரம் இல்லாதபடியால் முதலில் அதைப் பிரசுரித்து அதிலேற்படும் ஸித்தாந்தத்தை வெளியிட்டபிறகு உபாகர்மவிஷயத்தை எடுத்துக் கொள்வோம்,

(ப-ர்)

# ॥ गायत्रीजपविचारः ॥

---

“श्रावण्यां पौर्णमास्यां तिलभक्ष उपोष्य श्वोवाभूते महानद मुदकमुपस्पृश्य सावित्र्या समित्सहस्रमादध्याज्जपेद्वा” इत्याह भगवानापस्तम्बः । अतोऽवगम्यते गायत्री होमो जपो वा प्रतिपदीति श्वोभूते इत्युक्तेः । तत्र सम्पूर्णतिथौ पौर्णमास्यां प्रथमायां वा सन्देहाभावात् पूर्वेद्युः पौर्णमास्यामुपोष्यापरेद्युः प्रथमायां गायत्रीजपः कर्तव्य इति प्राप्नोति । यदा खण्डतिथी पौर्णमासी प्रतिपदौ भवतः तदा किं पूर्वविद्धा प्रतिपत् ग्राह्योतोत्तरविद्धा प्रतिपदिति विशये पूर्वविद्धा प्रतिपत् ग्राह्येति तावत् प्राप्तम् । कस्मात् । इष्टिकालस्यैवास्यापि कालत्वेन विहितत्वात् । तदुक्तम् वैद्यनाथदीक्षितीये “सन्धिः सङ्गवतः पश्चा दर्वागावर्तनाद्यदि । तत्रैवोपाकृतिं कुर्यात् सद्यश्च समिदाहृतिः ॥ सन्धिः सङ्गवतः प्राक्चेत् पूर्वस्मिन् पर्वणि क्रिया । श्वोभूते समिदाधान मेष श्रावणिको विधिः” इति । अत्र पूर्ववाक्ये सङ्गवादूर्ध्वमावर्तनादर्वाक् प्रतिपत् पर्वणोःसन्धि र्यदि स्यात् तदोपाकर्म गायत्रीजपश्चोभावपि तस्मिन्नेवाहनि कर्तव्याविति प्रतीयते । तदनुसारेणोत्तरेण वाक्येन सङ्गवान्तादर्वाग्यदि सन्धि र्भवति तदा

सन्धिदिनात्पूर्वदिने कर्तव्यमुपाकर्म, परस्मिन् दिने, अर्थात् सन्धि दिने गायत्रीजपः कर्तव्य इति च प्रतीयते । सन्धिदिनमेवेष्टिकाल इति स एव गायत्रीहोमस्यापि कालः । अनुकल्पतया प्राप्तस्य जप स्यापि । नतूत्तरविद्धा प्रतिपत्प्राह्येति स्मृतिषूपलभामहे । उक्तंहि भगवतापस्तम्बेन, "प्रतिपत् सद्वितीया स्यात् द्वितीया प्रतिपद्युता" इति । अन्यान्यपि च भविष्योत्तरस्कन्दादि वाक्यान्येवं भवन्ति । ननु पूर्वविद्धापि प्रतिपत् ग्राह्येत्यपि बहुलमुपलभ्यन्ते वचनानि । "युग्माग्नि युगभूतानां षण्मुन्योर्वसुरन्ध्रयोः । रुद्रेण द्वादशीयुक्ता चतुर्दश्या च पूर्णिमा ॥ प्रतिपद्यप्यमावास्या तिथेर्युग्मं महाफलम् । एतत्व्यस्तं महादोषं हन्ति पुण्यं पुराकृतम् ॥ इति । अन्यान्यप्येवं जातीयकानि वाक्यान्युदाहर्तव्यानि । बाढम् । तथापि "प्रतिप-द्यप्यमावास्या" इत्युक्तेः पूर्वविद्धाप्रतिपत् शुक्लपक्षविषयेति स्पष्टम् प्रतीयते । पारिशेष्यात् "प्रतिपत् सद्वितीया स्यात्" इत्यापस्त म्बोक्तिः कृष्णपक्षविषयेतियुक्तम् । प्रपञ्चैनैतदुपपादितं श्रीविद्यारण्य गुरुभिः, कालमाधवे । अस्तु । प्रकृते किमायातम् । इहापि प्रति-पत् कृष्णपक्षीया भवतीति परविद्धैव ग्राह्येति स्यात् । किमतो यद्येवम् । "एष श्रावणिको विधिः इति स्मृतिमुक्ताफलोक्तं बाधितं भवति । नैवं स्यात् । सामान्यविशेषन्यायेन व्यवस्थापयितुं शक्य त्वात् । "प्रतिपत् सद्वितीया स्यात्" इति सामान्यवचनं सर्वकृष्ण पक्षविषयतया भविष्यति । "एष श्रावणिको विधिः" इत्युपाकर्म गायत्रीजपमात्रपरतया विशेष्यते । तस्मात् गायत्रीजपव्यतिरिक्ता सर्वापि कृष्णप्रतिपदुत्तरविद्धा ग्राह्या, गायत्रीजपस्य तु पूर्वविद्धा प्रतिपदिति । एवं प्राप्ते ब्रूमः– उत्तरविद्धैव प्रतिपत् गायत्रीजपे ग्राह्येति । "प्रतिपत् सद्वितीयास्यात्" इति कृष्णपक्षविषयतयाभियु क्तैर्व्यवस्थापितत्वात् । ननूक्तं सामान्यविशेषाभ्यां निर्णयोयुज्यत इति इतरथा एषश्रावणिको विधिः इतीदमप्यभियुक्तैः निर्णीतं निर्विषयंस्यात् नैवंस्यात् । नहीदं गायत्रीजपव्यवस्थापनार्थं प्रवृत्तं वचनं । किं तर्हि उपाकर्मनिर्णयार्थम् । तथाहि । उदयसङ्क्रान्तोभयव्यापिन्यां पौर्ण मास्यामुपाकर्म । यदि दिनद्वयेप्येवं भवति तदा कथं कर्तव्यमिति विशये यद्यावर्तनादर्वाक् पर्वसन्धिर्भवति तदा तस्मिन्नेवाह्निकर्तव्यमुपा

कर्म; नोचेत् पूर्वेद्युः इत्येवनिर्णयार्थं प्रवृत्तं वचनमिदम् । गायत्रीजपस्तु भयथाप्यविकृत एव भवति । नपुनः पर्वसन्धिव्यत्ययेन विपरिवर्तत इती त्येव प्रतिपाद्यते । ननु सद्यश्च समिदाहितिः । श्वोभूते समिदाधानम् इति स्पष्टतरमुक्तं कथं स्वार्थे तात्पर्यं जह्यात् । अतोमन्यामहे उभयोः कालविधानार्थं प्रवृत्तमिदमिति । अतः प्रतिपत् सद्वितीयास्यात् इति चास्यच परस्परं विरोधादुत्सर्गापवाद न्यायेन परिहारः श्रेयस्करः । अत्र ब्रूमः । भवेदेतदेवं यदीष्टिकाल एवास्यापि काल इति प्रतीयेत । नत्वेवमस्ति । नापि "सद्यश्च समिदाहितिः" श्वोभूते समिदाधानम् "सन्धिः सङ्गवतः प्राक्चेत्" इत्यादिभिः पर्वसन्धिदिने कर्तव्यमिति प्रतीतेरिष्टिकाल एवास्यापि काल इति भ्रमितव्यम् । "तत्रैवोपाकृतिं कुर्यात्" "पूर्वस्मिन् पर्वणि क्रिया" इत्युपाकर्मैव पर्वसन्धिकालवशेन पूर्वोत्तरयो र्दिनयो र्विपरिवर्तत इति प्रतिपाद्यमानत्वात् । गायत्री जपस्तु सन्धिवशेन न प्राक्पश्चद्वापकृष्यते किन्त्वविकृत एव पौर्ण मास्यनन्तरदिने कर्तव्यो भवतीत्येतदेव भङ्ग्यन्तरेण वाक्यशेषेण प्रति पाद्यते "श्वोभूते समिदाधानम्" इत्यादिना । तस्मादिदं "श्वोवाभूते महानदमुदकमुपस्पृश्य सावित्र्या समित् सहस्रम्" इति प्रमाणान्तरसि द्धस्य पूर्णिमानन्तरदिनस्यानुवादकमेव केवलम् । नास्य पर्वसन्धिः किम प्युपकरोति । ननु "सद्यश्च समिदाहितिः" इत्युपाकर्मदिनेप्यस्य सम्भवात् सन्धिकालेनाप्यस्योपकारो भवति । नैवंस्यात् । पौर्णमास्यन- न्तरदिनपरत्वात् तस्य । दिनद्वयेप्युदयसङ्गवोभयव्यापिनी पौर्णमासी यदि स्यात् तत्र किं ग्राह्यमिति निर्णयार्थं प्रवृत्तं हि "सन्धिः सङ्ग वतः पश्चादर्वागावर्तनाद्यदि" इत्यादि वचनम् । तदेतत् स्मृति मुक्ताफलं सम्यक् परिशीलितवतां स्फुटं स्यात् । तत्र पूर्वेद्युः सम्पू- र्णा पौर्णमासीति "सद्यश्च समिदाहितिः" इति यस्मिन् विधीयते तत् पूर्णिमानन्तरदिनम् । तस्मात् प्रमाणन्तरसिद्धस्यानुवादोऽयम् । योहि यस्यविकारेण नाणुमात्रमपि विकुरुते तस्यानेन किमपि न स्यात् फलति न्यायविदामभ्युपगमः । तस्मादिष्टिकाल एवास्यापि काल इति नैव शक्यते वक्तुम् । कथमत्रोत्सर्गापवादन्यायस्यावतारः । युक्तमिष्टेः पौर्णमास्या अप्यपेक्षेति । "सन्धौ यजेत" इति श्रुतेः "पक्षा न्ताउपवस्तव्याः" "पक्षाद्या यष्टव्याः" इति स्मृतेः, "पर्वचतुर्थांश

स्यापि प्रतिपद इवेष्टिकालत्वात् । पर्वप्रतिपत्सन्धिसापेक्षत्वाच्च । तत्र पूर्वस्मिन् पर्वदिने यागारम्भः, उत्तरस्मिन् प्रतिपद्दिने यागसमाप्तिः'' इतिच निर्णीतत्वाद्विद्यारण्यैः कालमाधवे । नैवमत्र पूर्वदिने किञ्चित्कृत्यमस्ति गायत्रीहोमार्थं येन पर्वप्रदिपदोः सन्धिरपेक्ष्येत । नन्वत्राप्यस्ति पूर्वदिने कर्तव्यमुपोषणं गायत्रीहोमाङ्गतया । तस्मादस्त्यपेक्षा । नैवं स्यात् । अनुपपत्तेः । नहीदं दिनद्वयसाध्यमिष्टिवत् । तत्रहि पूर्वेद्युरध्वर्युणा "ममाग्नेवर्चः" इत्यादि मन्त्रैरग्निपरिग्रहो यजमानेन च "अग्निं गृह्णामि" इत्यादि मन्त्रपठनमपरेद्युः 'कर्मणे वां देवेभ्यश्शकेयं' इत्यादिप्रयोगै र्यजनमिति भवति । नैवं गायत्रीहोमो दिनद्वयसाध्यः "श्वोवाभूते महानदमुदकमुपस्पृश्य सावित्र्या समित् सहस्रमादद्ध्यात्" इत्यपरदिनमात्रसाद्ध्यत्वेन प्रतीयमानत्वात् उपवासस्तु स्वतन्त्रोन्याङ्गतया पूर्वेद्युर्विधीयते, अहोरात्रसाध्यत्वात् । तस्मात् कथमिष्टिकाल एवास्यापि कालः स्यात् । किं तर्ह्यस्यकालः, पूर्वाह्ण एव कथम् । दैवत्वात् । "पूर्वाह्णो वै देवानां" इति श्रुतेः । 'पूर्वाह्णे दैविकं कर्म" इति च स्मृतेः । पूर्वविद्धायां हि पूर्वाह्णो नैव लभ्येत । प्रायश्चित्तादिरूपनियमस्य व्रतहोमादेर्दैवकर्मत्वेन पूर्वाह्णएव कर्तव्यत्वात् गायत्री होमस्तु प्रायश्चित्तार्थं विधीयते । मिथ्याधीत प्रायश्चित्तं' इति पूर्वमुक्त्वा खण्डिकां परिसमाप्योत्तरखण्डिका समारभ्यते "श्रावण्यां पौर्णमास्यां तिलभक्ष उपोष्य" इति । तस्मात् कर्मकालव्याप्तिलाभादुत्तरविद्धैव ग्राह्या ताद्धि शास्त्रं बलीयः । न पूर्वविद्धा । स्यादेतत् । उपाकर्मनिर्णयार्थं प्रवृत्तादपि वाक्यात् कथम् प्रतीयमानं स्वार्थं परित्यजेम, तथाहि देवताधिकरणे श्रीमद्भाष्यं "अन्यार्थमपि प्रस्थितः पथिपतितम् तृणपर्णाद्यस्तीत्येव प्रतिपद्यते" इति । अन्यपरादपिवाक्यादसति बाधके प्रतीयमानोर्थो ग्राह्य इत्येव न्यायविद आहुः । तस्मादन्यपरादपि "सद्यश्च समिदाहितिः" "श्वोभूते समिदाधानम्" इत्यादेः प्रतीयमानं सन्धिदिनं कथं परित्यजेम । परित्यजेम एव बाधकप्रतीतेः । किमत्र बाधकम् । "यस्मिन् कालेतु यत् कर्म तत्कालव्यापिनीतिथिः" इति कर्मकालविधायकं शास्त्रमत्रबाधकम् । प्रबलं हि तत् । तस्मादिष्टि–काल एवास्यापि कालो न स्यात् । एतेन "नयष्टव्यं चतुर्थंशे यागैः प्रतिपदः कचित्' इति स्मृतेः प्रतिपच्चतुर्थांशो निषिध्यत इत्यपि निरस्तम् ।

यागे: इत्युक्त्या सन्धिदिनसापेक्षाया इष्टेरेव तेन निषिद्धत्वात् वृद्ध शातातपेनाप्यस्य प्रतिप्रसवतया 'कुर्वाणः प्रतिपद्यागे चतुर्थेऽपि नदुष्यति' इति चतुर्थभागस्याप्यनुमतत्वात् । हन्तैवं निषेधो निर्विषयः स्यात् । न तस्य "सद्यस्कालविषये चरितार्थत्वात्" इति श्रीविद्यारण्यैरुपपादितत्वात् । तस्मादकिञ्चित्कर एव गायत्रीजपे पर्वसन्धिः । नन्वामध्याह्नं पूर्वाह्णः । तत् पूर्वद्युरपि भविष्यति पूर्वविद्धायाम् । सत्यम् तथाप्युत्तरविद्धायां प्रतिपदि पूर्वाह्णस्य समग्रस्यापि संभवात् कर्मकालबाहुल्यम् लभ्यते । यत्र दिनद्वयेऽप्येकदेशेनैवपूर्वाह्णोलभ्यते तत्र वृद्धिक्षयाभ्यां निर्णयः "क्षयगामित्वे त्रिमुहूर्तामप्युत्तरविद्धां परित्यज्य पूर्वेद्युरेवानुष्ठानम् । वृद्धिगामित्वे साम्ये च परेद्युरिति निर्णयः" इति प्रतिपन्निर्णये श्री विद्यारण्यैरुक्तत्वात् । विस्तरस्तु तत्रैव । तदेवमिष्टिदिनस्य गायत्रीहोमकालत्वेनाप्रतीयमानत्वात् कर्मकालव्याप्तिशास्त्रेण बाधितत्वाच्चोत्तरविद्धा प्रतिपदेव प्रबलतरकर्मकालव्याप्तिशास्त्रकृष्णपक्षशास्त्राभ्यामनुगृहीता गायत्रीहोमकाल इति सिद्धम् ॥

---

इति श्री वाधूलकुलजलधिकौस्तुभानामद्वैताचार्याणां
श्री गुरुस्वामिशास्त्रिणां सूनुना नटेशशास्त्रिणा
कडयं ग्रामाभिजनेन विरचितो गायत्री जप
विचारः ॥

---

अतो वत्सरेऽस्मिन् शनिवारएव गायत्री जपः ॥

---

# வாரவிருத்தாந்தம்,

ஸெப்டம்பர் 8௳ சாரதா சட்டத்திற்கு திருத்தம்வந்து தீர்மானமாகும் நாளது. ஸாதகமாக பல விடங்களில் கூட்டம்கூடி தீர்மானம்செய்து அனுப்பினால் அநேகமாக பகவதனுக்ராஹத்தால் அநுகூலமாகலாம். நமது ஆஸ்திகர் கும்பகர்ண நித்ரையை விட்டெழுந்தாலன்றோ நற்காலம் பிறக்கப்போகிறது.

இதன்தலையிலா விடிந்தது? தேசமெங்கும் பணத்தட்டு ஏற்பட்டு சிக்கனம்செய்து தனத்தை மீட்க பகீரத ப்ரயத்தனம் நடக்கிறது. கல்வித்துறையில் சென்னை அரசாங்க கல்லூரியில் ஸம்ஸ்கிருதப் பிரிவை எடுத்துவிட அரசாங்கம் தீர்மானித்ததாம். இது உண்மையாயின் இதைவிட கெடுதல் வேறில்லை, பல துறையில் கடல்மடை எடுத்தாற்போல் அநாவச்யமான பணம் செலவாகிறது. பலருக்கு அள்ளி அள்ளி தாராளமாக தனம் கொடுக்கப்படுகிறது. குடிகள் பணத்தைக்கொண்டு நடத்தும் இந்தியாது புராதன பாஷையான கீர்வாண வாணியை நிறுத்துவது அடாத செயல். மற்றவர் சம்பளத்தை குறைத்தாவது இக்கல்வியை விருத்திசெய்வது அல்லது கொஞ்சம் வாஸனை அழியாமல் காப்பது தர்மம்.

இதுவா ஸாது ஸங்கம்? சென்னையில் ஒரு நகத்தை நீளமாக வளர்க்கும் சாமியார் அகில இந்தியா சாதுஜனசங்கம் எனபெயரிட்டு உத்தியோகத்திலுள்ள லௌகிகர்களது நட்பைப்பெருகிறார். இதை எவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்- இவர் செய்யும் கொஞ்ச கர்மவேலையும் அவர் உபன்யாஸத்திற்கு அழைத்துவரும் லௌகிகர்களால் கெடுகிறது. வெள்ளைக்காரியை மணந்து சக்தியிருந்தால் நித்யமோர் பிராமணக்கருவை அழிப்பதாக ஸபையில் மார்தட்டின வீரரைக்கொண்டு தர்மக்கொடியை பறக்கவிடச் சொன்னார். அவர்பேச்சு எப்படி இருக்குமென இதிலிருந்தே நன்குணரலாம். ஸாது என்ற பெயரை அஸாதுவான விஷயத்தில் வைப்பது தகுமா?

வேண்டாம்! வேண்டாம்!! தர்மத்தைக்கெடுக்க கலிராஜன் பற்பல துறைகளைக் கண்டான். இதில் ஸங்கீத ஸபை ஒன்றாகும். சென்னை சபையார் சங்கீதப்போட்டி பரீக்ஷைவைத்து

16-வயதிற்கு கீழுள்ள குல ஸ்திரீகளையும் பாட அழைக்கின்றனர். ஸங்கீதமே ஆகர்ஷிக்கும் ஸ்வபாவமுள்ளது. சிறு பெண்கள் பல புருஷர் நடுவில் பாடுவதெனில் சிறுமிகள் சிறுவர் சித்த விருத்தி எப்படி ஆடும் என சொல்லவேண்டுமா? காமத்தைக் களைந்து கலையைக்கண்டுகளிக்கும் காலமா யௌவனம்! குல ஸ்திரீகளை ஸபையில் பாடச்செய்து தாஸி ஜாதியையே அகற்றுவது நாகரீகமாம்? இப்பேய் நாகரீகக் குழியில் உங்கள் ஸத்குலத்தி லுதித்த பெண்மக்களை தள்ளவேண்டாம்! என பெற்றோருக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

வடநாடே சரணம்:—சாரதாசட்டத்தைத்தொலைக்கவேண்டிய முயற்சி செய்யும்படி பலர் பலமுறை பலவகையாக வேண்டியும் தென்னாடு கும்பகோணம் தவிர திரும்பிப் பார்க்கவில்லை. கடவுளே கவனிப்பார் என்றபூர்ண நம்பிக்கையோ அல்லது ஊருக்காவது நமக்காகட்டுமென்ற உதாஸீனமோ, அல்லது எவராவது உழைக்கட்டும். பயனைநாம் பெறுவோம் என நரி வஞ்சகமோ நாமறியோம். டாக்கூர் என்ற வடநாட்டுப்ரதேசத்தில் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தினுதாவில் ஹிந்து மஹம்மதியர் சேர்ந்து பெருங் கூட்டம்கூடி ஷை சட்டத்தைக்கண்டித்து ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார் திருத்தத்தை ஆமோதித்தனர். ஏதாவது நற்கதிபிறக்கவேண்டுமானால் வடநாடே வழிகாட்டவேண்டும். பலனுண்டானால் பங்குபெறும் நம்மைநாமே பார்க்க வெட்கிக்கவேண்டும்.

தைவத்தினிடமுமா? நமது காமக்ரோதத்ரோஹாதி துர்குணங்களைக்களைந்து நல்ல சித்தவிருத்தியும் பக்தியும் ஞானமும்பெற ஆலயம் செல்வது வழக்கம். தற்காலபாடம் தலைகீழிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட இடமில்லை. தங்களுக்கிஷ்டமான மூர்த்தியை ஸ்தாபிக்க மற்ற மூர்த்தியை அப்புறப்படுத்துவதோ பின்னப்படுத்துவதோ மூடிவிடுவதோ ஸஹஜமாய் விட்டது. இதற்கு சாஸ்த்ரம் சிஷ்டாசாரம் ஆகமம் தேவையில்லை. இஷ்டமும் செல்வாக்கும் இருந்தால்போதும். மதுரை கள்ளழகர் கோவிலில் ஸூர்யநாராயண விக்ரஹத்தை அப்புறப்படுத்தி விநாயகர் விக்ரஹத்தை வைத்ததாக வியாஜ்யம் நடக்கிறது. மறு உத்தரவு வரை ஷை விக்ரகத்தைப் பூட்டி ஸீல் வைக்கும்படி உத்திரவாயிருக்கிறது. ஆஸ்திகபக்தர் இதற்கு இடமளிக்கலாகாது.

சிறுத்யாகம் பெருந்தர்மம்:—ஆதிசங்கரபகவத்பாதாள் காஞ்சீயில் காமகோடி பீடத்தைஸ்தாபித்து காமாக்ஷி அம்பாளின் ஆலய தர்மத்தை ஸ்ரீ மடம் ஆதீனத்தில்வைத்ததை உலகறியும். அவ்வாலயம் ஸ்ரீ மதாதி சங்கரது அபிநவ அவதாரமான தற்கால பீடாதிபதிகளான ஸ்ரீ மகாஸன்னிதானத்தில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்படுவதும் தெரிந்ததே. ஸ்ரீ காமாக்ஷிக்கு ஓர் வெள்ளிரதம்செய்ய ஸ்ரீ சிவம் முன்வந்தது நமது பாக்யமே. ஸ்ரீ சிவத்தின் ஸ்வபாவத்தைக்கூற யாரே வல்லவர். இப்பெரும் பணியில் நமக்கும் பங்குகொடுக்க சென்னையில் வீடுவீடாக "பிடி அரிசி கலயம்" கட்டிவருகிறார். இங்ஙனமே மற்ற ஊரார் தாங்களே இவ்வேலையைச்செய்து பணத்தை அம்பாளுக்கு அர்ப்பணம் செய்து ஜன்மம் ஸபலமாகும்படிசெய்க!

ஓர் பெரும்நஷ்டம்:—காசிமா நகரிலுள்ள ஸ்ரீ த்ராவிட லக்ஷ்மணசாஸ்திரிகள் மதகைங்கர்யம் புரியும்போது திடீரென நம்மை விட்டுஸத்கதியை அடைந்தார். ஆஸ்திக உலகம் ஓர் உத்தமகிங்கரனையும் பண்டித உலகம் ஓர் உத்தம பண்டிதனையும் இழந்தது. இந்த நஷ்டத்தை ஈடுபடுத்த யாவரால்முடியும்? இவர் அங்கு சென்றும் முடியுமானால் யாதாமொரு கைங்கரியத்தையேசெய்ய ஆசைகொள்வர். அவரிடமனுதாபமுள்ளோரும் அவர் புத்ர சிகாமணி ராஜராஜேச்வர சாஸ்திரிகளும் அவர் விட்டுச்சென்ற வேலையை பூர்த்திசெய்வாராக.

ஸ்ரீவத்ஸ வே ஸோமதேவ சர்மா.

---

## ஓர் அனுதாபக்கூட்டம்.

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸபை ஸம்பாதகரான த்ராவிட லக்ஷ்மண சாஸ்திரிகள் காலஞ்சென்றதைப்பற்றி ஷை ஸபை நிர்வாக அங்கத்தவரான ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவ சர்மாவின் தலைமையில் "ப்ரும்மஸதன"த்தில் ஓர் பொதுக்கூட்டம் கூடி அவர் புதல்வருக்குத் தங்கள் வருத்தத்தை தெரிவித்து அவர்விட்டவேலையை பூர்த்திசெய்யும்படி அறிவித்தது.

L. ராமச்சந்திர சாஸ்திரி.